# அநுமன் துதி



ஆக்கம்

ஞானவெட்டியான் - திண்டுக்கல்

# அநுமன் துதி

| | |
|---|---|
| 1 | ஓம் அசோகவனம் அழித்தவனே போற்றி |
| 2 | ஓம் அடலுடை வீரா போற்றி |
| 3 | ஓம் அபயம் தருபவனே போற்றி |
| 4 | ஓம் அழியா ஆன்மா உடையவனே போற்றி |
| 5 | ஓம் அனந்த சக்தி கொண்டாய் போற்றி |
| 6 | ஓம் அங்கதன் மெச்சிய அமைச்சரே போற்றி |
| 7 | ஓம் அணுவில் புகுந்தவனே போற்றி |
| 8 | ஓம் அஞ்சனை புத்திரா போற்றி |
| 9 | ஓம் அம்மை சோகம் தீர்த்தவனே போற்றி |
| 10 | ஓம் அம்மையின் ஆசி பெற்றவனே போற்றி |
| 11 | ஓம் அருச்சுனன் தேர்க்கொடி அமர்ந்தவனே போற்றி |
| 12 | ஓம் அனுமேயம் கடந்தவனே போற்றி |
| 13 | ஓம் அனுமனே போற்றி |
| 14 | ஓம் அனுமந்தா போற்றி |
| 15 | ஓம் அன்றினர் அழித்தவனே போற்றி |
| 16 | ஓம் ஆசையை வென்றவனே போற்றி |
| 17 | ஓம் ஆதவனைப் பிடித்தவனே போற்றி |
| 18 | ஓம் ஆதவன் மாணாக்கனே போற்றி |
| 19 | ஓம் ஆயகலைகள் அத்தனையும் அறிந்தவனே போற்றி |
| 20 | ஓம் அசுர குலத்து எமனே போற்றி |
| 21 | ஓம் ஆஞ்சனேயா போற்றி |
| 22 | ஓம் ஆயுள் வளர்ப்பவனே போற்றி |

# அநுமன் துதி

| | |
|---|---|
| 23 | ஓம் இராம தூதா போற்றி |
| 24 | ஓம் இராம பக்தா போற்றி |
| 25 | ஓம் இராகுவைப் பிடித்தவனே போற்றி |
| 26 | ஓம் இலங்கை அழித்தவனே போற்றி |
| 27 | ஓம் இலங்கணி பணிந்தவனே போற்றி |
| 28 | ஓம் இலக்குவனுக்கு உயிரூட்டியவனே போற்றி |
| 29 | ஓம் இரஞ்சித முகத்தோனே போற்றி |
| 30 | ஓம் இரத்தின குண்டலம் அணிந்தவனே போற்றி |
| 31 | ஓம் இந்திர சித்தை வென்றவனே போற்றி |
| 32 | ஓம் உயிர்ப்பின் மைந்தா போற்றி |
| 33 | ஓம் ஊழி கடந்தவனே போற்றி |
| 34 | ஓம் எப்பவும் இராமா என்றிடும் தேவா போற்றி |
| 35 | ஓம் ஐம் புலன் அடக்கினவனே போற்றி |
| 36 | ஓம் கங்கையில் நடந்தவனே போற்றி |
| 37 | ஓம் கடல் கடந்தாய் போற்றி |
| 38 | ஓம் கடிகையில் அமர்ந்தவனே போற்றி |
| 39 | ஓம் கணையாழி ஈந்தவா போற்றி |
| 40 | ஓம் கணகண கண்டாமணி நாதனே போற்றி |
| 41 | ஓம் கதாயுதபாணியே போற்றி |
| 42 | ஓம் காமனை வென்றவனே போற்றி |
| 43 | ஓம் காலநேமி அழித்தவனே போற்றி |
| 44 | ஓம் காலத்தை வென்றவனே போற்றி |

# அநுமன் துதி

| | |
|---|---|
| 45 | ஓம் கிரீட குண்டலனே போற்றி |
| 46 | ஓம் கிட்கிந்தை வாழ்ந்தவனே போற்றி |
| 47 | ஓம் கோடை இடிக் குரலோனே போற்றி |
| 48 | ஓம் கோள் துயர் நீக்கும் கோமகனே போற்றி |
| 49 | ஓம் கேதுவை அடித்தவனே போற்றி |
| 50 | ஓம் கேசரி மைந்தா போற்றி |
| 51 | ஓம் சக்தியின் இருப்பிடமே போற்றி |
| 52 | ஓம் சஞ்சிதம் களைபவனே போற்றி |
| 53 | ஓம் சஞ்சீவி மலை கொணர்ந்தவனே போற்றி |
| 54 | ஓம் சத்திய உருவே போற்றி |
| 55 | ஓம் சர்வ ரோகம் தீர்ப்போனே போற்றி |
| 56 | ஓம் சிரஞ்சீவியே போற்றி |
| 57 | ஓம் சீதாராமனை நெஞ்சில் காட்டியவனே போற்றி |
| 58 | ஓம் செங்கமலக் கையுடையவனே போற்றி |
| 59 | ஓம் செந்தூர நெற்றி உடையவனே போற்றி |
| 60 | ஓம் சொல்லின் செல்வா போற்றி |
| 61 | ஓம் சுந்தர காண்ட நாயகனே போற்றி |
| 62 | ஓம் சுடர் ஒளித் திருவே போற்றி |
| 63 | ஓம் சூடாமணி கண்டவனே போற்றி |
| 64 | ஓம் ஞான ஒளியே போற்றி |
| 65 | ஓம் தசமுகப் பிரபுவே போற்றி |
| 66 | ஓம் தண்டைக் கழலோனே போற்றி |

# அநுமன் துதி

| | |
|---|---|
| 67 | ஓம் தத்துவ ஞானியே போற்றி |
| 68 | ஓம் திரிசடை புகழ்ந்தோய் போற்றி |
| 69 | ஓம் திருவடி தாங்குபவனே போற்றி |
| 70 | ஓம் தீவினை அழிப்பவனே போற்றி |
| 71 | ஓம் துளசி மாலை அணிந்தவனே போற்றி |
| 72 | ஓம் நட்பின் இலக்கணமே போற்றி |
| 73 | ஓம் நவசக்தி மைந்தா போற்றி |
| 74 | ஓம் நறுமணம் கமழும் மேனியுடையவனே போற்றி |
| 75 | ஓம் நான்கு திருக்கரத்தை உடையவனே போற்றி |
| 76 | ஓம் நிகும்பலை யாகம் அழித்தவனே போற்றி |
| 77 | ஓம் நித்தியனே போற்றி |
| 78 | ஓம் நிரந்தரமானவனே போற்றி |
| 79 | ஓம் பராக்கிரமா போற்றி |
| 80 | ஓம் பாரிசாத மரத்தடி அமர்தவனே போற்றி |
| 81 | ஓம் பாவ விமோசனம் தருபவனே போற்றி |
| 82 | ஓம் பிரமச்சாரியே போற்றி |
| 83 | ஓம் பீமனின் அண்ணனே போற்றி |
| 84 | ஓம் பெரிய பெருமாளே போற்றி |
| 85 | ஓம் மகா தவசியே போற்றி |
| 86 | ஓம் மங்களம் தருவோனே போற்றி |
| 87 | ஓம் மஞ்சுள மாருதியே போற்றி |
| 88 | ஓம் மதுவனம் திரிந்தவனே போற்றி |

# அநுமன் துதி

| | |
|---|---|
| 89 | ஓம் மருத மர வாசனே போற்றி |
| 90 | ஓம் மாதங்க வனப் பிரியனே போற்றி |
| 91 | ஓம் மாயையை நீக்குவபனே போற்றி |
| 92 | ஓம் மேதாவியே போற்றி |
| 93 | ஓம் மைநாகம் கண்டோய் போற்றி |
| 94 | ஓம் யோகத்தின் இலக்கணமே போற்றி |
| 95 | ஓம் வச்சிர உடல் உடையவனே போற்றி |
| 96 | ஓம் வச்சிராயுதம் உடைத்தவனே போற்றி |
| 97 | ஓம் வடிவழகு உடையவனே போற்றி |
| 98 | ஓம் வலிமுகம் கொண்டாய் போற்றி |
| 99 | ஓம் வாக்கு வன்மை தருபவனே போற்றி |
| 100 | ஓம் வாயு குமாரா போற்றி |
| 101 | ஓம் வானரர் தலைவா போற்றி |
| 102 | ஓம் விசுவ உருக் கொண்டவனே போற்றி |
| 103 | ஓம் விண்ணில் பறந்தவா போற்றி |
| 104 | ஓம் வித்தை ஈந்தவா போற்றி |
| 105 | ஓம் வீர சூர பராக்கிரமா போற்றி |
| 106 | ஓம் வெண்ணைப் பிரியனே போற்றி |
| 107 | ஓம் வேகத்தின் எல்லையே போற்றி |
| 108 | ஓம் வைதேகி புகழ்ந்தோய் போற்றி |

# ஆஞ்சநேயன் துதி

மிகச் சிவந்த முகமுடைய வானரன்
மேரு போன்ற எழிலுரு வாய்ந்தவன்
பகை யழித்திடும் வாயுவின் புத்திரன்
பாரிசாத மர நிழல் வாழ்பவன்
ஆஞ்சநேயனை அஞ்சலி செய்கிறேன்
ஆஞ்சநேயனை அஞ்சலி செய்கிறேன்.

---

அரக்கர் கூட்டம் அழித்து மகிழ்பவன்
ஆளும் இராமனின் நாமம் கேட்டிடில்
சிரத்தின் மீதிவன் கூப்பிய கையுடன் திரண்ட
கண்ணில் நீர்சோரத் துதிப்பவன்
ஆஞ்சநேயனை அஞ்சலி செய்யுமின்
ஆஞ்சநேயனை அஞ்சலி செய்யுமின்

---

சித்த வேகமும் வாயுவின் வேகமும்
சேர்ந்தவன் தன் புலன்களை வென்றவன்
புத்தி மிக்கவர் தம்முட் சிறந்தவன்
புகழி ராமனின் தூதுவன் வாயுவின்
சேயன் வானர சேனையின் முக்கியன்
சென்னி தாழ்த்தியச் செம்மலைப் போற்றுவேன்.

---

யாரும் செய்வதற் கேயரி தானதை
.....ஐயநீ செய்குவை ஏதுனக் கரியது?
பாரில் என்செயல் நீநிறை வேற்றிவை.
.....பரிவின் ஆழிநீ இராம தூதனே!
ஆஞ்சநேயனே! அஞ்சலி செய்கிறேன்!
.....ஆஞ்சநேயனே! அஞ்சலி செய்கிறேன்!

---

அறிவு மற்றும் உடல் வலி நற்புகழ்
.....ஆளும் சொற்றிறம், அச்சமிலா மனம்
வறிய புன்பிணி நீங்கிய மேநிலை
.....வளரும் தைரியம் மேவிடும் நிச்சயம்
ஆஞ்சநேயனை அஞ்சலி செய்திடின்
......அனுபவத் தினில் இவைபெற லாகுமே!

---

(ஆஞ்சநேயன் கோயிலில் கொடுத்த ஒரு அறிவிப்புத் தாளிலிருந்து எடுக்கப்பட்டது.)